தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநர் ( தொழிற் கல்வி) செயல்முறைகள்,சென்னை–6
ந.க.எண். 1502/வி1/இ2/2007 , நாள் 03.08.2011

-----

பொருள் பள்ளிக் கல்வி – 2008–09ம் ஆண்டில் தொழிற்கல்வி கணினி பயிற்றுநர்கள், ஆசிரியர் தேர்வு வாரியத்தால், தேர்ந்தெடுக்கப்பட்டு நியமனம் வழங்கப்பட்டது – சிறப்பு தேர்வில் 50%க்கு குறைவாக, மதிப்பெண் பெற்று பணிநீக்கம் செய்யப்பட்டு, உயர்நீதிமன்ற தடையாணை பெற்று தொடர்ந்து பணிபுரிபவர்கள் – சார்பு.

பார்வை 1. கிருஷ்ணகிரி முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம்
ந.க.எண். 2080/அ3/2010 நாள் 21.07.2011
2. சென்னை, முதன்மைக் கல்வி அலுவலரின் கடிதம்
ந.க.எண்.713/அ3/2006 நாள் 22.07.2011
3. மேல்நிலைப்பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்கத் தலைவரின் கடிதம் நாள் 1.8.2011

------

2008–09ம் ஆண்டில், தொழிற்கல்வி கணினி பயிற்றுநர்கள் நியமனம் சார்பாக, ஆசிரியர் தேர்வு வாரியத்தால் நடத்தப்பட்ட சிறப்புத் தேர்வில் 50 % க்கு குறைவாக, மதிப்பெண் பெற்று, உச்சநீதிமன்றத்தின் இறுதி தீர்ப்பின்படி, பணி நீக்கம் செய்யப்பட்டு, உயர்நீதிமன்ற தடையாணை பெற்று, தொடர்ந்து பணிபுரிபவர்கள் சார்பாக, வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளதால், இறுதி தீர்ப்பு பெறப்படும் வரை, சார்ந்த கணினி பயிற்றுநர்களுக்கு தமிழ்நாடு பணிவிதிகளின்படி ( Service Rule) ஊதிய உயர்வும், தமிழ்நாடு விடுப்பு விதிகளின்படி, சிறு விடுப்பு, ஈட்டிய விடுப்பு சரண் விடுப்பு ஈட்டாவிடுப்பு மற்றும் மகப்பேறு விடுப்பு அனுமதிக்கப்படவேண்டும்.

மேலும் இது போன்ற தேவையற்ற தெளிவுரைகள் கோருவது வீணான காலதாமதத்திற்கு வழிவகுக்குமென்பதால் இது போன்ற செயல்களை தவிர்க்குமாறும், முதன்மைக் கல்வி அலுவலர் நிலையிலேயே நடவடிக்கை மேற்கொள்ளுமாறும் அறிவிக்கப்படுகிறது.

(ஒம்/.) வீ.இராஜராஜேஸ்வரி
இணை இயக்குநர் (தொழிற்கல்வி)

பெறுநர்
முதன்மைக் கல்வி அலுவலர்
கிருஷ்ணகிரி மற்றும் சென்னை.

நகல்

1. அனைத்து முதன்மைக் கல்வி அலுவலர்கள் (கிருஷ்ணகிரி மற்றும் சென்னை தவிர)
2. மாநிலத் தலைவர், மேல்நிலைப்பள்ளி கணினி ஆசிரியர்கள் சங்கம்,
   40, எம்.ஜி.ஆர். நகர், ரயில்வே மேட்டுத் தெரு, தென்காசி – 627 811.